# வெஸ்டன் இந்தியா மிஷன்
# Western India Mission

செய்திமலர் ஆகஸ்ட் 2022

**கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு,**

புதிய மாதத்தைக் காணச் செய்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். கடந்த மாதங்களிலெல்லாம் கர்த்தர் நம்மைக் காத்து வழிநடத்தி வந்த கிருபைக்காய் அவருக்கு ஸ்தோத்திரம். இந்த மாதத்திலும், இன்னும் வரப்போகிற நாட்களிலும் நம்மைக் கண்மணிபோல் பாதுகாத்து வழிநடத்தப் போகிற தேவனுக்கே மகிமை உண்டாவதாக. நமது வாழ்வில் ஏற்பட்ட உபத்திரவம், வியாதி நேரங்களில் தமது கிருபையால் நம்மைத் தாங்கி வந்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.

கொரோனாவின் தாக்குதல் சற்று குறைந்திருந்த நிலையில், மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கையைத் தொடர்ந்த சூழ்நிலையில் மீண்டுமாக கொரோனாவின் தாக்குதலை உணரக் கூடிய அளவிற்கு ஏற்பட்டுள்ளது. நம் தேசம் சுதந்திரமடைந்து 75 ஆண்டுகளைக் கடந்த நிலையில் கொரோனா தடுப்பூசியை 75 நாட்களில் இலவசமாக பெற்றுக் கொள்ள மத்திய அரசு மக்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டுள்ளது. பெருந்தொற்றின் தாக்குதல் முற்றிலுமாகக் குறைந்து போக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். இந்நோய்த்தொற்றின் தாக்குதலால் அநேக குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்காக ஜெபிப்பது மட்டுமல்ல நமது உதவிக் கரங்களை நீட்டுவதையும் தேவன் எதிர்பார்க்கிறார்.




VBS நிகழ்வுகள்-2022

பல மாதங்களாக நடைபெறும் யுக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கிடையேயான யுத்தம் சீக்கிரத்தில் முடிவுக்குவர ஜெபியுங்கள். இதினிமித்தம் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் மற்றும் காயப்பட்டுள்ள பல வீரர்கள், பொது ஜனங்களின் மறுவாழ்வுக்காக ஜெபியுங்கள். மேலும் அந்தந்த நாடுகளில் மட்டுமன்றி உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்கு சரியான தீர்வு காணப்பட ஜெபியுங்கள். தங்கள் இரத்தத்தை சிந்தி மரித்த பல்லாயிரக்கணக்கானோருடைய தியாகக் குரல்கள் தலைவர்களின் செவிகளில் ஒலிப்பதினிமித்தமாவது யுத்தத்தை நிறுத்த இரு நாட்டு தலைவர்களும் முடிவெடுக்க வேண்டும்.

நமது அண்டை நாடாகிய இலங்கையில் நடைபெறும் சம்பங்கள் நமது கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது. நாட்டில் தோன்றியுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள், மக்களுக்கு ஏற்பட்டுள்ள பணநெருக்கடி, உணவு பற்றாக்குறை, பெட்ரோல் இல்லை மற்றும் மின்சாரம், சமையல் எரிவாயு போன்ற அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ள சூழ்நிலை நிலவுகிறது. மருத்துவ வசதியும் இல்லை. அடுத்து என்ன செய்யப் போகிறோம் என்பது மக்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் தெரியாத நிலைமை. ஐக்கிய நாட்டு சபை போன்றவைகள் இடைபட்டு செயல்பட்டால்தான் நிலைமை சீரடையலாம். இதற்காக ஜெபிப்போம். மேலும் பாக்கிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளிலும் இத்தகைய நெருக்கடி நிலைமை சீக்கிரத்தில் ஏற்படும் சூழ்நிலையில் உள்ளதாக சொல்லப்படுகிறது. இதுபோன்று இன்னும் பல நாடுகளில் பொருளாதார பின்னடைவு காரணமாக இவ்வித நிலைமை ஏற்படலாம் என பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

பரிசுத்த வேதாகமத்தில் மத்தேயு 24ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து கூறியுள்ளதுபோன்று "யுத்தங்களையும் யுத்தங்களின் செய்தியையும் கேள்விப்படுவீர்கள்" (மத் 24 : 6) "ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும் ராஜ்யத்திற்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும் கொள்ளை நோய்களும் பூமியதிர்ச்சயும் பல இடங்களில்



VBS நிகழ்வுகள்-2022

உண்டாகும்" (மத் 24 : 7) இவைகளெல்லாம்வேதனைக்கு ஆரம்பம். இவைகள் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறது. மட்டுமின்றி, மத்தேயு 24 : 9ம் வசனம் கூறுவது போல், "அப்பொழுது உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களை கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்". அநேகங் கள்ளதீர்க்கதரிசகளும் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள். (மத் 24 : 11) என்ற தேவ வார்த்தைகள் நிறைவேறும் காலத்திற்குள்ளாய் நாம் வந்திருக்கிறோம் என்பதை நமக்கு தெளிவுபடுத்துகிறது. இதுவரை இல்லாத அளவு பல கள்ளதீர்க்கதரசிகள் உலகமெங்கும் குறிப்பாக தமிழகமெங்கும் பரவிவருகிறார்கள். நாம் விசுவாசிக்கும் விசுவாசபிரமாணத்திற்கு விரோதமாய் சொல்லப்படுகிற எந்த செய்தியும் கள்ள தீர்க்கதரிசனமே. உண்மையான தேவனுடைய பிள்ளைகளுக்கு உபத்திரவமும், சகல ஜனங்களால் பகைக்கப்படுவதுமே இவ்வுலகில் உண்டு என்பதை வேதம் நமக்கு தெளிவாக எடுத்துரைக்கிறது. இவர்களோ நீங்கள் எல்லா காரியங்களிலும் வாழ்ந்து சுகித்திருப்பீர்கள் என்கின்றனர். கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே சிந்தித்து செயல்படுங்கள்.

ஆண்டவருடைய கிருபையால் குஜராத் பகுதில் நாம் கட்டிவரும் தேவாலயம், மேற்கூரை போடும் வகையில் வளர்ந்துள்ளது. சீக்கிரத்தில் அதனை கட்டிமுடிக்க தேவையான பொருளாதாரத்தை தேவன் அருளும்படி ஜெபியுங்கள். ஆண்டவர் உங்களை உணர்த்தினால் உதவி செய்ய முன்வாருங்கள். நமது ஊழியர்கள் மற்றும் நமது விசுவாசிகளின் பிள்ளைகளின் படிப்பிறகாண பெரும் நிதி தேவைப்படுகிறது. ஆர்வமுள்ளோர் கொடுத்து, தேவனால் ஆசீர்வதிக்கப்படுவீர்களாக !

தேவ வார்த்தையாகிய வேத வாக்கின்படி வாழ நம்மை அர்ப்பணிப்போம்! ஒரு நாளில் அவரோடு கூட வாழக்கூடிய நித்திய வாழ்விற்கு நம்மை ஆயத்தப் படுத்துவோம்! தேவன் தாமே நம் அனைவரையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக ஆமென்!




VBS நிகழ்வுகள்-2022

## செய்தி-ஜெபம் கேட்கப்படாமல் போகிறதற்கான காரணங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, அநேக நேரங்களில் நாம் ஜெபம் செய்யும் போது சோர்வுகள் வருகிறது. எவ்வளவு நாட்களாக நான் ஜெபிக்கிறேன், உபவாசித்து ஜெபிக்கிறேன், கண்ணீரோடு ஜெபிக்கிறேன், கதறி ஜெபிக்கிறேன், ஏன் என் ஜெபத்துக்கு பதில் வரவில்லை என்று கலங்கி நிற்கிற நேரங்கள் உண்டு. இதற்கெல்லாம் என்ன காரணங்களாக இருக்கும் என்று என்றைக்காவது யோசித்து பார்த்திருக்கிறோமா? வேதத்திலே நம்முடைய ஆண்டவர் ஜெபத்தை கேட்கிறவர், ஜெபத்திற்கு பதில் கொடுக்கிற தேவன் என்று வசனங்கள் கூறுகிறது. தாவீது சொல்லும் போது "ஜெபத்தை கேட்கிறவரே, மாம்சமானயாவரும் உம்மிடத்தில் வருவார்கள்" (சங் 65 : 2) என்கிறார். நம்முடைய ஆண்டவர் விண்ணப்பத்தை கேட்கிறவர்தான். ஆனால் ஜெபம் ஆண்டவருடைய பார்வைக்கு உகந்ததாய் இருக்க வேண்டும். சாலமோன் ராஜா ஆண்டவரிடன்தில் ஒரு விண்ணப்பம் செய்கிறான். அது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது என்று வேதம் சொல்கிறது.( 1இராஜா 3 : 10 ). நாம் ஜெபிக்கிற ஜெபம் எப்படி இருக்க வேண்டும், ஜெபிக்கும் போது நாம் செய்ய வேண்டிய ஆயத்தம் என்ன என்பதைக் குறித்து வேதம் கற்று கொடுக்கும் காரியத்தை கற்றுக் கொள்வோமானால் எல்லா ஜெபத்துக்கும் பதிலைப் பெருவது உறுதி.

### 1 பாவத்தோடு செய்யும் ஜெபம் வீண்

அசுத்தமான பாத்திரத்தில் வைக்கப்பட்டிரும் எந்த சுவையான பதார்த்தமும் யாருக்கும் பிரயோஜனமற்றதாக இருக்கும். ஆதைப் போன்று அசுத்தமான செயல், சிந்தையுள்ளவர்களாய், பாவத்தையும் செய்து கொண்டு தேவனுடைய சமூகத்தில் சென்று எவ்வளவுதான் ஜெபித்தாலும் அதனால் பிரயோஜனமும் இல்லை. அந்த ஜெனம் கேட்கப்படப்போவதில்லை. "இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா 59 : 1, 2) என்று ஏசாயா தீர்க்கன் தெளிவாகக் கூறுகிறார். நம்முடைய பாவம் நமக்கும் தேவனுக்கும் பிரிவினை உன்டாக்குகிறது; தேவனுடைய வார்த்தைகளுக்கு செவிகொடாதபடிக்கு நம்மை தடைசெய்கிறது; அவர் முகத்தை நமக்கு மறைக்கிறது. காணிக்கை செலுத்த வரும்போது, உன் சகோதரன் பேரில் உனக்கு மனஸ்தாபம் இருந்தால் பலிபீடத்தினிடத்தில் காணிக்கையை வைத்துவிட்டுச் சென்று, சகோதரனிடத்தில் ஒப்புரவாகி பின்பு வந்து காணிக்கையை செலுத்தும்படி வேதம் நமக்கு கற்றுக்கொடுக்கிறது. நாம் உண்மையாய் பாவங்களை அறிக்கைசெய்து

**ஜெப விண்ணப்பங்களை அனுப்ப..**

இம்மாத உபவாச ஜெபம் 31.08.2022 அன்று நமது அலுவலகத்தில் வைத்து நடைபெறும். தனிப்பட்ட ஜெபக்குறிப்புகளை அனுப்ப விரும்புகிறவர்கள் **8838261572** என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு தெரிவிக்கவும். உங்களுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.

விட்டுவிட்டவர்களாக அவருடைய சமூகத்தில் சென்று ஜெபிக்கும் போது நம்முடைய நியாயமான ஜெபங்களுக்கும் உடனே பதில் கொடுக்கிறவராய் இருக்கிறார். நாம் ஜெபிக்கிற போதெல்லாம், நம்மை நாமே நிதானித்து பாவங்களை உண்மையாய் அறிக்கையிட்டு ஜெபிப்போம். ஜெயத்தைப் பெறுவோம்.

## 2 மனுஷர் காண வேண்டும் என்பதற்காக ஜெபிப்பதும் வீண்

அநேக நேரங்களில் நயவசனிப்போடு நாம் ஜெபிக்க முற்படுவதும் உண்டு. பலர் நம் ஜெபத்தை குறித்து பிறர் நம்மை பாராட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு ஜெபிப்பவர்களும் உண்டு. இப்படிப்பட்ட ஜெபங்கள் கேட்கப்படுவதில்லை. "மாயக்காரராகிய உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணுகிறீர்கள் அதிக ஆக்கினையை அடைவீர்கள்" (மத் 23:14) என்று வேதத்தில் வாசிக்கிறோம். நாம் ஜெபிக்கிற போதெல்லாம் அவரை நோக்கி மனத்தாழ்மையோடு உண்மையான ஆத்துமபாரம், கரிசனை நிறைந்தவர்களாக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். வேதத்தில் இரண்டு மனிதர்கள் தேவாலயத்தில் ஜெபிக்க போனார்கள். பரிசேயன் தன்னைக் குறித்து மேட்டிமையான எண்ணம் கொண்டவன். பறிகாரர். அநியாயக்காரர், விபசாரக்காரர், போல இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் என்று தன்னைப் பெரிய நீதிமான் என்ற எண்ணம் கொண்டவனாக ஜெபிக்கிறான். ஆயக்காரன் மார்பில் அடித்துக்கொண்டு கிருபைக்காக கெஞ்சுகிறான். ஆயக்காரனே ஆசீர்வதிக்கபட்டவனாகத் திரும்புகிறான். அநேக நேரங்களில் மனுஷர் பாராட்டவேண்டும் என்கிற சிந்தையோடு, மேட்டிமையாக செயல்படும் போது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய ஜெபம் மனுஷரை பிரியபப்டுத்துகிறதாக அல்ல, தேவனை மகிமைப்பபடுத்துகிறதாகவும், பிரியப்படுத்துகிற ஜெபமாகவும், இருக்குமானால், ஜெபத்தைக் கேட்டு நம் கர்த்தராகிய ஆண்டவர் பதில் கொடுப்பார்.

## 3 ஏழைக்கு இரங்காதவனுடைய ஜெபம் வீண்

நம்மை சுற்றி இருக்கிற ஏழை எளியவருக்கு உதவி செய்து நம்மால் இயன்ற நன்மைகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாய் இருக்கிறார்.




VBS நிகழ்வுகள்-2022

உன்னை நேசிப்பது போல பிறனையும் நேசிக்க வேண்டும் என்பதை இயேசு கிறிஸ்து அதிகமாக வலியுருத்துகிறதை வேதாகமம் முழுவதும் பார்க்கலாம். "பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்து கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்" (ஏசா58 : 7). ஏழை எளியவர்களை கவனியாமல், நம்மை சுற்றியிருக்கிறவர்களை குறித்து எந்த ஒரு கரிசனையும் இல்லாமல் நாம் எவ்வளவுதான் ஜெபித்தாலும் கொடுத்தாலும் தேவன் அவைகளை அங்கிகரிக்க மாட்டார் என்று வேதாகமம் நமக்கு தெளிவாகக் கூறுகிறது. சிறுமைப்பட்டவர் மேல் சிந்தனையுள்ளவர்களுக்கு தேவன் அருளும் ஆசீர்வாதம் என்னவெனில் "விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும் கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்" (ஏசா 58 : 8). எத்தனை பெரிய ஆசீர்வாதம். இவர்களுடை ஜெபத்தை ஆண்டவர் கேட்கிறார்.

நம்முடைய பரந்த இந்தியா தேசத்தில், கவனிப்பார் இன்றி ஏராளமான இன மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு அன்பின் சுவிஷேசம் அறிவிக்க, அவர்களுக்கு உதவிட ஆண்டவர் நம்மோடு இடைபடுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய திருச்சபைக்கு எழுதும்போது "தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்கு மாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்குமுன்பே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்" (கலா 2 : 10) என்று எழுதுகிறார். பவுல் போகிற இடமெல்லாம் தரித்திரருக்கு பணத்தை சேகரித்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறதைப் பார்க்கிறோம். தரித்திரரை நினையாமல் எவ்வளவு நீண்ட ஜெபம் செய்தாலும், உபவாசம் இருந்தாலும் அது கர்த்தராகிய இயேசுவின் பார்வையில் உகந்ததாய் இராது. ஐசுவரியவான், லாசரு சம்பவத்தில் ஏழை லாசருக்கு உதவிசெய்யும் சந்தர்ப்பம் இருந்தும், செய்யாதபடியினால் பாதாளத்தில் ஐசுவரியவானின் ஜெபம் கேட்கப்படவில்லை. சிறுமைப்பட்டவர்கள் மேல் சிந்தையுடன் ஜெபிக்கும்போது, தேவன் நமது ஜெபத்திற்கு பதிலளிக்கிறவராக இருக்கிறார்.

VBS நிகழ்வுகள்-2022



## 4 வேதத்திற்கு செவியை விலக்குகிறவன் ஜெபம் வீண்

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருக்கிறவன் ஆசீர்வதிக்கப்படுவான். இரவும் பகலும் அதில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். வேதத்தை நேசியாமலும், வாசியாமலும் ஜெபித்தால் அந்த ஜெபம் கேட்கப்படமாட்டாது. "வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" (நீதி 28:9). வேத வார்த்தைகள் நமக்காக தேவனிடத்தில் இருந்து அருளப்பட்டவை. இதில் நடக்க வேண்டிய வழிகள், கீழ்படியவேண்டிய கட்டளைகள் இவை அனைத்தும் அருளப்பட்டிருக்கிறது. அவைகளை ஒவ்வொரு நாளும் வாசிக்கமட்டும் அல்ல, அதன்படி நடக்க நாம் ஒப்புக்கொடுக்கும் போது நம்முடைய ஜெபத்தை கேட்டு பதில் கொடுக்க நமது தேவன் இரக்கமுள்ளவராய் இருக்கிறார். "உம்முடைய வர்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்" என்று வேதவசனத்தை ருசித்துப் பார்த்த தாவீது ராஜா கூறுகிறார்.

அன்பானவர்களே, நம்முடைய எல்லா ஜெபங்களும் கேட்கப்பட வேண்டுமேயானால் வேதம் நமக்கு கற்று கொடுக்கிற இந்த காரியங்களை மனதில் வைத்து அதற்கேற்றபடி வாழ நம்மை நாம் அற்பணித்து, அவருக்கு பிரியமான சுகந்த வாசனையான ஜெபங்களை ஏறெடுப்போமானால், நம்முடைய ஜெபங்களுக்கு பதிலைப்பெற்று, வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ முடியும். நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து செயல்படுவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து உயர்த்துவாராக ஆமென்.



**VBS** நிகழ்வுகள்-2022


இந்த மிஷனெரி ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள எங்கள் வங்கி கணக்கில் ECS மூலம் பணம் அனுப்பி உதவலாம்.

Canara bank, Vannarpettai Branch, Tirunelveli
A/c Name: Western India Mission
A/c No: 2952101007959
IFSC Code: CNRB0002952

Axis Bank, KTC Nagar, Branch, Tirunelveli
A/c Name : Western India Mission
A/c No : 922010016879568
IFSC Code : UTIB0003601

(பணம் அனுப்பப்பட்ட விபரத்தையும், M.O மூலம் பணம் அனுப்பி ஊழியங்களுக்கு உதவிசெய்வோரும் 9944306154 என்ற செல்போனுக்கு SMS மூலம் தெரியப்படுத்தினால் உங்களுக்கு ஒப்புகை ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

**பணித்தள பார்வை - பூர்கி :**

மஹாராஷ்டிரா மாநிலத்தில், கடிச்சிரோலி மாவட்டத்தில் எட்டாபள்ளி தாலுகா உள்ளது. இந்த தாலுகாவில் சுமார் 120 கிராமங்கள் உள்ளன. இதில் பூர்கி என்றும் கிராமத்தில் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இந்த தாலுகாவில் இன்னும் சபையில்லாத கிராமங்கள் அநேகம் உள்ளன. 90 சதவிகித மக்கள் இசேுவை யார் என்று இன்னும் அறியவில்லை. இவர்கள் சந்திக்கபட வேண்டிய தேவை உள்ளது. பூர்கி கிராமத்தில் சுமார் 300 வீடுகளும் சுமார் 1500 மக்களும் வசிக்கின்றனர். நமது பூர்கி சபையில் 14 குடும்பங்களை தேவன் தந்திருக்கிறார். ஞாயிற்றுக்கிழமை ஆராதனை, உபவாசக்கூடுகை, வீட்டு ஜெபக்கூடுகை என பல்வேறு விதமான ஆராதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் நமது விசுவாசிகள் ஆர்வமுடன் பங்கு பெறுகின்றனர். இன்னும் இந்த கிராமத்தில் 1000க்கும் மேற்பட்டோர் சந்திக்கப்படவில்லை. மேலும் முற்றிலுமாக சந்திக்கப்படாத பல கிராமங்கள் இங்கு உண்டு. இந்த ஊழியத்தை தொடர்ந்து நிறைவேற்ற உங்கள் ஜெபத்தால் எங்களை தாங்குங்கள்.

**சந்திக்கப்படாத மக்களின் வாழ்க்கை முறை:**

"மாடியா" என்னும் மொழி பேசும் மாடியா இனமக்கள் பெரும்பாலும் "தலா முத்தே" என்று சொல்லப்படும் ஒரு பெண் தெய்வத்திற்கு பூஜை செய்கின்றனர். இதை அவர்கள் வெறும் ஊரை உருவாக்கிய தெய்வமாகவே வழிபடுகின்றனர். இதுதான் பெரிய கடவுள் என்றல்ல, இந்த ஊரில் வாழவேண்டுமானால் இதற்கு பூஜை செய்தே ஆகவேண்டும் என நம்புகின்றனர். இதற்காக பலிகொடுக்கின்ற பழக்கம் உள்ளது. மறைமுகமாக நரபலிகளையும் கொடுக்கின்றனர். ஓவ்வொரு கிராமத்திற்கும் "பெருமாள்" என்று அழைக்கப்படும் ஒரு பூசாரி இருந்து, அங்குள்ள ஜனங்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளனர். குடிப்பழக்கம், விபச்சாரம் பெரிய பாவமாக கருதப்படுவதில்லை. இவர்களுக்கு மற்றெந்த தெய்வத்தையும் வணங்க தடையில்லை. ஆனால் இயேசுவிடம் வந்தால் மிகுந்த எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆனாலும் இவர்கள் குடும்பத்தில் நிம்மதி இல்லாமல் வியாதியினாலும் அசுத்த ஆவிகளாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய இந்த கடினமான மனநிலை மாற ஜெபிப்போம்.




VBS நிகழ்வுகள்-2022

இவர்களை சந்திக்க தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். வீட்டுக் கூடுகைகள் நடத்தப்படுகிறது. அதாவது ஊழியர்கள் அங்கு செல்லாமல் விசுவாசிகளைக் கொண்டே நடத்தப்படுகிறது. புதிய மக்கள் வந்து ஜெபிப்பதற்கு ஏற்றவிதமாக இதை செய்து வருகிறோம். தேவன் இந்தக் கூடுகைகளில் கிரியை செய்ய ஜெபிப்போம்.

**பூர்கியை சுற்றியுள்ள கிராமங்கள்**

மர்கல், எமிலி, காந்தோடி இந்த மூன்று கிராமங்களுக்காக தொடர்ந்து நாம் ஜெபித்து வருகிறோம். கர்த்தருடைய கிருபையால், மர்கல் கிராமத்தில் கணேஷ் என்ற வாலிபனின் குடும்பத்தை தேவன் புதிதாக சந்தித்தார். இந்த குடும்பம் பலப்படவும், இவர்கள் மூலம் இந்தக் கிராமம் சந்திக்கப்படவும் ஜெபித்துக் கொள்ளவும்.

**தூட்பள்ளி - ஆலயம் கட்ட தீர்மானித்துள்ள கிராமம்**

தூட்பள்ளி என்னும் கிராமம் அடர்ந்த காடான பகுதிக்குள் இருக்கிறது. இங்கு உராவி மற்றும் மாடியா மொழிகள் பேசும் மக்கள் வசிக்கின்றனர். இது சிறிய கிராமம்தான். ஆனாலும் இந்த கிராமத்தைச் சுற்றிலும் அநேக கிராமங்கள் உள்ளன. தேவனுடைய உதவியால் இங்கு ஒரு சிறிய ஆலயம் கட்ட முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. ஊர்த்தலைவர் மனதில் தேவன் பேசுவாராக. முதலில் இங்கு 100பேர் உட்கார்ந்து ஆராதிக்கும் வகையில் ஒரு ஆலயம் கட்டப்பட வேண்டும். இந்த ஆலயம் மண்சுவரால் கட்டப்பட்டு மேற்புற கூரை Tin sheet ஆல் அமைக்கபட உள்ளது. இதற்காக மொத்த செலவு ரூ.1,00,000/- வரை ஆகும். மிகுந்த காட்டுப் பகுதிக்குள் இருப்பதால் போக்குவரத்து செலவு அதிகம் ஆகும். நமது விசுவாசிகள் இதற்காக ஜெபித்துக் கொண்டு வருகின்றனர். தேவன் அற்புதம் செய்வாராக. ஆண்டவர் உங்கள் உள்ளத்தில் பேசினால் உதவி செய்ய முன்வாருங்கள்.




VBS நிகழ்வுகள்-2022

## சாட்சி கச்சிலோ கிராமம்: மதுக்கர் காவ்டே

பூர்கியிலிருந்து 20கி.மீ தொலைவில் உள்ள இந்த கிராமத்தில் மதுக்கர் காவ்டே (40) என்பவர் ஊர்த்தலைவராக வசித்து வருகிறார். இவருக்கு 4 பெண்பிள்ளைகள் உள்ளனர். இவர் திடீரென்று பைத்தியம் போல பேசத் ஆரம்பித்துள்ளார். பல மந்திரவாதிகளிடம் காட்டியும் ஒரு பயனும் இல்லை. கடந்த சிலகாலமாக அவரது நிலைமை மிகவும் மோசமாகியது. கண்ணில் படுகிற எவரையும் அடிக்க ஆரம்பித்தார். எனவே, அவரை கயிற்றால் இடுப்பில் கட்டி அவரது வீட்டார் பிடித்து வைத்திருந்தனர். இந்நிலையில் இவரது உறவினர் நமது ஊழியரை தொடர்பு கொண்டார். ஊழியர் அங்கு சென்று ஆலோசனை கூறி ஜெபித்துவந்தார். தேவன் அற்புத சுகம் கொடுத்தார். இவர் புத்தி தெளிந்து, இப்பொழுது தெளிவாக எல்லாருடனும் பேசுகிறார். சுகமாக உள்ளார். தேவன் அவருக்கு சுகம்கொடுத்து விசுவாசித்தில் பலப்படச் செய்துள்ளார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

## அறிந்தவன் அழைத்து வந்தான்!

கடந்த மே மற்றும் ஜுன் மாதங்களில் குஜராத் மற்றும் மஹாராஷ்டிராவில் நடைபெற்ற VBS நிகழ்சிகள் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். குஜராத்தில் 11 கிராமங்கள் மற்றும் மஹாராஷ்டிராவில் 5 கிராமங்களில் நடைபெற்றது. சுமார் 1100 க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு செய்கையோடு பாடல்கள், கதைகள், ஜெபம், வேதவசனம் ஆகியவைகள் கற்றுக் கொடுக்கப்பட்டது. அநேக குழந்தைகள் இயேசுவின் அன்பை தங்களுடைய வாழ்வில் உணர்ந்து கொண்டனர்.
காஞ்சர் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன் கெனில். இவன் கடந்த வருடம் குழந்தை தின விழாவிற்காக நடத்தப்பட்ட சிறப்பு முகாமில் கலந்து கொண்டான். அப்போது அவன் கற்றுக்கொண்ட பாடல்களும், கதைகளும் மிகவும் பிடித்ததால் மீண்டும், ஆலயம் வரவும், சிறுவர்



VBS நிகழ்வுகள்-2022

வகுப்பில் கலந்து கொள்ளவும் ஆர்வம் கொண்டான். ஆனால் ஆலயம் செல்ல அவனது வீட்டார் அனுமதிக்கவில்லை. இருப்பினும் ஆர்வம் குறையாத கெனில், நமது ஊழியரிடம் இவ்விடுமுறையில் ஏதாவது குழந்தைகள் சிறப்பு நிகழ்ச்சி இருந்தால் தனக்குத் தெரியப்படுத்துமாறு சொல்லிச் சென்றிருந்தான். அவ்விதமே, கலந்து கொள்ள வந்த கெனில் தனியாக அல்ல, தான் அறிந்த, அனுபவித்த நல்ல கதைகள், பாடல்கள், பொம்மலாட்டங்கள் இவற்றைக் கூறி அமிதம், ஷைலேஷ், மற்றும் பார்த் எனும் மூவரை தன்னுடன் அழைத்து வந்தான். VBS ன் முடிவில் நான்கு பேரும் ஐந்து வசனங்களை மனப்பாடமாகக் கூறி தேவனை மகிமைப்படுத்தினர். மனந்திருந்திய இளைய மகனைப் போல் இயேசுவிடம் திரும்பிவந்து, அவருக்குப் பிரியமான நல்வாழ்வு வாழவும் அர்ப்பணித்துச் சென்றிருக்கின்றனர். இதேபோல் வேறுபல சாட்சிகளும் உண்டு.

வானத்தின் கீழே, பூமியின் மேலே, மனுஷருக்குள்ளே ஒப்புவமை இல்லாத இயேசுவின் நாமத்தைப் பற்றிக்கொள்ளவும், இரட்சிப்படையவும், கோணலும் மாறுபாடுமான இச்சந்ததியின் நடுவில் ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு, சுடர்களைப்போல பிராகாசிக்க சிறுவர்களுக்கு, கற்றுக்கொடுத்ததுடன், பொம்மலாட்டம், ஒட்டுப்படம், நகரும் படம் மற்றும் இரவு படக்காட்சி என முழுநிகழ்வாக குழந்தைகளுடன் அவரது பெற்றோர்களுக்கும், கிராம மக்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.

மூன்றாம் நாளில் தங்கள் தலைகளில் VBS கிரீடம் சூட்டி, பரலோக ராஜாவின் குட்டி தூதர்களாக, குழந்தைகளில் கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைப்பெற்றது. இதனைக்கண்ட பெற்றோருக்கும் மிகவும் மகிழ்ச்சி. மட்டும்மின்றி இத்தகைய நிகழ்ச்சிகளை தங்கள் பகுதியில் அடிக்கடி நடத்த நமது ஊழியர்களை வேண்டிக்கொண்டார்கள். இன்னும் பல இலட்சக்கணக்கான சிறுவர்கள் இயேசுவை அறியவில்லை. அவர்களை, இயேசுவண்டை வழிநடத்த நம்மை ஆண்டவர் அழைக்கிறார் என்பதை ஊழியர்கள் அறிந்து கொண்டனர். தேவன் தந்த திறந்த வாசலுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்.

இந்த தேவைகளுக்காக உதவி செய்ய அழைத்தபோது, ஜெபித்து உதவிய அனைவர்க்கும் மிக்க நன்றி. தேவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!




**VBS நிகழ்வுகள்-2022**

# ஜெபவிண்ணப்பங்கள்

- பூர்கிக்கு அருகிலுள்ள, தூட்பள்ளி என்ற கிராமத்தை சார்ந்த, ரூபி (30) என்ற சகோதரி, மனநலம் பாதிக்கப்பட்டவராக உள்ளார். எனவே, கணவராலும், பெற்றோராலும், கைவிடப்பட்டவர். இவர் நமது விசுவாசி ஒருவர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார். இவருடைய மனநிலை தெளிவடைய, தேவன் அற்புத சுகம்அருள ஜெபிப்போம்.
- கன்சோலி என்ற கிராமத்திலுள்ள, 12ம் வகுப்பு தேர்ச்சி அடைந்துள்ள தர்ஷனா மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார். பெற்றோர் மற்றும் அவரைச்சாந்தவர்கள், விசுவாசத்தோடு ஜெபித்துச் சென்றிருக்கிறார்கள். விரைவில் சுகம்பெற ஜெபிப்போம்.
- குயிதா பகுதியைச்சார்ந்த, ருத்விக் என்னும் சகோதரரை அவரது மனைவியின் குடும்பத்தார் குடும்ப சூழ்நிலை காரணமாக, கட்டிப்போட்டு அடித்ததினால் காது சவ்வு கிழிந்துவிட்டது. மேலும் மிகுந்த பதற்றத்துடன் தெளிவற்ற மனநிலையில் இருக்கிறார். விரைவில் தேவன் அற்புத சுகத்தோடு சமாதானம் அருள ஜெபிப்போம்.
- பாந்தர்கவ்டாவை சேர்ந்த ஆனிதா தைராய்டு நோயிலிருந்து குணமாகவும், மற்றும் தொடையில் கட்டி உள்ளதால் சரியாக உட்கார, நடக்க முடியாமல் கஷ்டபடுகிறார் கயர்காவ் பகுதியை சேர்ந்த ஜெயபால் (20) பூரண சுகத்தை பெறவும் ஜெபிப்போம்.
- ஜய்னி உசேண்டி (38) என்கின்ற சகோதரி பூர்கியைச் சேர்ந்தவர். முதுகுப்பகுதியில் உள்ள எலும்பில் ஏற்பட்ட பலவீனத்தால் நடக்க முடியாமல், உட்கார முடியாமல் அவதிப்பட்டு வருகிறார். இவரது கணவர், ஊழியரை தமது இல்லத்திற்கு அழைத்து சென்றார். ஊழியர் இயேசுவைப் பற்றி கூறி ஜெபித்து வந்துள்ளார். தேவன் அற்புத சுகம் கொடுக்க ஜெபிப்போம். கணேஷ் என்ற வாலிபன் தேவனுக்காக வைராக்கியம் கொண்டவனாக உள்ளான். இவனுக்த் தகுந்த ஆலோசனை, உதவிகள் செய்து ஒரு நல்ல ஊழியனாக உருவாக்க முடிவு செய்துள்ளோம். இவனுடன் இன்னும் இரண்டு வாலிபர்களும் தேவப் பணியில் ஆர்வம் காட்டுகின்றனர். இதற்காக ஜெபியுங்கள்.
- மாகல் கிராமத்தை சேர்ந்த கஜானன் டோங்ரே (50) குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, வயிறு வீங்கி வியாதிப்படுக்கையில் உள்ளார். சாப்பிட முடியாமல் சிரமப்படுகிறார். அவருக்கு இயேசுவைப்பற்றி அறிவித்து, ஜெபித்தும் வந்தோம். இவருடைய மரணப்படுக்கை மாற, ஆத்துமா இரட்சிப்படைய ஜெபிப்போம்.

அன்பரின் பணியில்,

**Dr. G. ஜெயக்குமார் மற்றும் ஊழியர்கள்**

**உங்கள் ஜெப தேவைகளுக்கும் மேற்கு இந்திய பகுதிகளில் நடைபெறும் மிஷனெரி ஊழிய விபரங்களை அறிந்து கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எங்கள் மொபைல் எண்கள் மற்றும் முகவரி:**


Dr. ஜெயக்குமார் 9894075795 சகோ. தங்கராஜ் 9944306154
சகோ. செல்வக்குமார் 9994040186 சகோ. ∴பெலிக்ஸ் 9600992654
சகோ. கோயில்பிள்ளை 9159827209

*Our Address:*
**Western India Mission,**
**C-98, East Rahmath Nagar, Tirunelveli 627 011.**

இணையதள முகவரி : https://westernindiamission.com


DIOCESAN OFFSET PRESS, PALAI - PH : 0462 - 2573182